



## மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் (DTCP)

## ஈரோடு மாவட்டம்

## பெருந்துறை ஊராட்சி ஒன்றியம்

ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், பெருந்துறை ஊராட்சி ஒன்றியம், துடுப்பதி ஊராட்சி, பாலக்கரை கிராமம், நி.அ.எண்.318/1C, 321/1B1B1 மற்றும் 321/1B1B3 -ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம். (திட்டமில்லா பகுதி)

**இணையதள எண் : QG020YO2** **நாள்:19.7.2022**

வ

அளவு : 1 : 400

**குறிப்பு:-**

மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு : 0.98 ஏக்கர் (அ) 3953.00 ச.மீ

ஒதுக்கிய மனைகள் : 19 Nos

மனைப்பிரிவின் எல்லை :

நிலையிலுள்ள சாலை :

**பொது ஒதுக்கீடு :**

**உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட வேண்டியவை:-**

1.விஸ்திரிப்பு மனைப்பிரிவு சாலை = 409.63 ச.மீ

2.பூங்கா ஒதுக்கீட்டிற்கான பரப்பளவு = (மனைப்பிரிவின் பரப்பு - உத்தேச சாலை பரப்பு) x 10%

(3953.00 ச.மீ - 409.63 ச.மீ) = 3543.37 x (10%) = 354.34 ச.மீ

(360 ச.மீ (10.16%) மனுதாரரால் அரசு வழிகாட்டி மதிப்பு தொகை செலுத்தப்பட உள்ளது.)

3. பொது உபயோகம் = 19.33 ச.மீ (0.55%)

**தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகத்திற்கு தானமாக ஒப்படைக்கப்பட வேண்டியவை:-**

4. மின் பகிர்மானம் = 18.78 ச.மீ (0.53%)

**கட்டிட வரம்பு:-**

9.0 மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.5 மீ விடப்படல் வேண்டும்.

9.0 மீ-க்கு மேல் 18.0 மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 3.0 மீ விடப்படல் வேண்டும்.

**மூலை முடுக்கு:-**

12.0 மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.5 மீ X 1.5 மீ விடப்படல் வேண்டும்.

**நிபந்தனைகள்:-**

1. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும்முன் இடத்தினை எந்தத்துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப்பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்பட வில்லை என்றும், உள்ளாட்சி உறுதி செய்து கொள்ள வேண்டும்.

2. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என்று அறியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களால் ரத்து செய்யப்படும்.

3. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

4. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றம் விடுதலின்றி மனைப்பரிவு நுழைவாயிலில் 6'x4' அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.

5. உத்தேச மனைப்பிரிவு சாலைகளுக்கு மனுதாரரால் தார் சாலைகளாக அமைக்கப்பட்டு ஆணையாளர்/ செயற்பொறியாளர் அவர்களிடம் உத்தேச மனைப்பிரிவு சாலைகளின் தரம் குறித்து தகுதிச்சான்று பெறப்பட்ட பின்னர் உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

6. இம்மனைப்பிரிவின் ஒப்புதல் மாவட்ட முனிசீப் நீதிமன்றம் பெருந்துறை வழக்கு எண் : 139 /2020 க்கு உட்பட்டது.

7. மனை எண்: 3 நீதிமன்ற தீர்ப்பிற்கு பின்னர் மனுதாரருக்கு உரிமையாகும் பட்சத்தில் மட்டுமே விற்பனை செய்யப்பட வேண்டும்.

8. நீதிமன்ற தீர்ப்பு மனுதாரருக்கு எதிராக பெரும் பட்சத்தில் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட ஒப்புதல் எவ்வித முன் அறிவிப்புமின்றி இரத்து செய்யப்படும்.

**SWP / DTCP / ERODE / LAYOUT APPROVAL No : 44 / 2022**

Signature Not Verified
Signed by: Assistant Director
Location:Erode
Date:2022.10.29 [illegible]7:23:19

துணை இயக்குநர் (பொ),
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
ஈரோடு மாவட்டம்.